[11th July 1962]

கனம் திரு. வி. ராமையா : பின்னால் வரக்கூடிய மானியக் கோரிக்கையின் பேரில் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசினால் அந்தச் சமயத்தில் விவரம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து புதுக்கோட்டைப் பக்கம் காவேரியில் இருந்து வாய்க்கால் கொண்டுவருவது கடினமானதாகவும், காலதாமத மாகக் கூடியதாகவும் தோன்றுகிறது. அங்கே ஜல வசதியைப் பெருக்குவதற்கு ஊற்றுக்களை விசேஷமாகத் தோண்டுவதன் மூலமாகவாவது நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா ?

கனம் திரு. வி. ராமையா : இப்பிரச்சனை கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது. பொதுக் கிணறு வெட்டுவது இதுவரையிலும் வழக்கத்தில் இல்லாமல் இருந்தது. ஆனால் சென்ற தடவை, விவசாய இலாகா அமைச்சராக இருக்கக்கூடிய கனம் திரு. கக்கன் அவர்கள் முயற்சியிலே இரண்டு, மூன்று தாலுக்காக்களில் ஐந்தாறு இடங்களில் பொதுக் கிணறுகள் வெட்டப்பட்டன. அந்தமாதிரி யான கிணறுகள் நல்லவிதமாக அமைந்திருக்கின்றன. அந்தப் பரிட்சார்த்த கிணறுகளுக்கு போதுமான மின்சாரம் கொடுத்து, ஒவ்வொரு ஆயக்கட்டிலும் விவசாயம் பாதிக்காத முறையில் தண்ணீர் கொடுப்பதாக முடிவு எடுத்திருக்கிறோம். அந்தப் பரிட்சார்த்தத் திட்டம் நன்றாக வரும் பட்சத்தில் அறந்தாங்கி, திருப்பத்தூர், சிவகங்கை போன்ற பகுதிகளில் இந்தப் புதுமுயற்சியை மேற்கொள்ளலாம் என்பது அரசாங்கத்தின் யோசனை.

திருமணிமுத்தாறு-பொன்னியாறு திட்டங்கள்.

*237. கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— 9-00 a.m.

சேலம் மாவட்டத்தில் திருமணிமுத்தாறு, பொன்னியாறு ஆகிய திட்டங்கள் எப்போது நிறைவேற்றப்படும்.

THE HON. SRI V. RAMAIAH : Instructions have been issued to the Chief Engineer (Irrigation) to have the schemes investigated by the Special Officer appointed for examining and investigating long term measures to combat floods and mitigate flood effects.

கிணற்று மானியம்.

*238 கேள்வி.—திரு எஸ். ஜே. ராமசாமி : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் நமது மாநிலத்தில் விவசாயிகளுக்கு எத்தனைக் கிணறுகளுக்கு மானியம் அளிக்கப்பட்டது, மாவட்டவாரியாக ?

(இ) 1962-ம் ஆண்டும் கிணறுகளுக்கு மானியம் அளிக்கும் உத்தேசமுண்டா ?